பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**27 04 2026** **6 45**

**திங்கட்கிழமை** **காலை**

**<u>தலைப்புச் செய்திகள்</u>**

1. அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி என்ற நோக்கத்துடன் மத்திய அரசு கொள்கைகளை வகுப்பதோடு, அதை நடைமுறையில் செயல்படுத்தி வருவதாக மத்திய சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சர் திரு வீரேந்திர குமார் கூறியுள்ளார்.

2. நாட்டில் கடந்த 5 ஆண்டுகளில், விண்வெளித் துறையில் தனியார் முதலீடு 600 மில்லியன் டாலரை எட்டியுள்ளதாக மத்திய விண்வெளித் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

3. வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்ட அனைத்து மாநிலங்களின் முன்னேற்றமும் இன்றியமையாதது என்று தமிழக ஆளுநர் திரு ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் கூறியுள்ளார்.

4. தமிழகத்தில் ஓரிரு இடங்களில் இன்று லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**5.** ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் கொல்கத்தா அணி - லக்னோ அணியை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி என்ற நோக்கத்துடன் மத்திய அரசு கொள்கைகளை வகுப்பதோடு, அதை நடைமுறையில் செயல்படுத்தி வருவதாக மத்திய சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சர் திரு வீரேந்திர குமார் கூறியுள்ளார்.

சண்டிகரில் சமூகநீதி தொடர்பாக நடைபெற்ற 3 நாள் தேசிய மாநாட்டில் நேற்று அவர் நிறைவுரையாற்றினார்.

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்ட சமூகநீதி அவசியம் என்றும், அரசு திட்டங்களின் பயன்கள் கடைக்கோடி மக்களையும் சென்றடைவதை உறுதி செய்ய அரசு பாடுபட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

திட்டங்களை ஒருங்கிணைந்து செயல்படுத்த இதுபோன்ற தேசிய மாநாடுகள் முக்கிய பங்காற்றும் என்று அவர் கூறினார்.

சிக்கல்களை ஆராய்ந்து அவற்றுக்கு தீர்வு காண்பது குறித்து இந்த மூன்று நாள் மாநாட்டில் விரிவாக ஆலோசிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

ஷெட்யூல்டு வகுப்பினர், பிற்படுத்தப்பட்டோர், மாற்றுத்திறனாளிகள், மூன்றாம் பாலினத்தோர் உள்ளிட்ட அனைவரையும் அரசு திட்டப் பலன்கள் முறையாக சென்றடையும் நோக்கில் மக்கள் தொகை கணக்கெடுப்பின்போது பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும், அதற்கான நடைமுறைகள் குறித்தும் இந்த 3 நாள் கருத்தரங்கில் ஆலோசிக்கப்பட்டதாகவும் திரு. வீரேந்திர குமார் குறிப்பிட்டார்.

<<<<>>>>

நாட்டில் கடந்த 5 ஆண்டுகளில், விண்வெளித் துறையில் தனியார் முதலீடு 600 மில்லியன் டாலரை எட்டியுள்ளதாக மத்திய விண்வெளித் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் விண்வெளி தொடர்பான ஆய்வகங்களை அமைக்கும் திட்டம் குறித்து புதுதில்லியில் நேற்று அவர் ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது பேசிய அவர், விண்வெளித் துறையில் புத்தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை **400-**ஐ கடந்துள்ளதாகத் தெரிவித்தார்.

இத்துறையில் புத்தொழில் நிறுவனங்களை ஊக்குவிக்க மத்திய அரசு ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் நிதியத்தை உருவாக்கி இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

இது இளைஞர்களின் பங்களிப்பை அதிகரிக்கும் என்று அவர் கூறினார்.

பல்கலைக்கழகங்களில் விண்வெளி தொடர்பான ஆய்வகங்களை அமைப்பது இத்துறையில் திறன்வாய்ந்த இளைஞர்களை ஊக்குவிக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

பல்வேறு நாடுகளுடனும் இந்தியா ஒருங்கிணைந்து செயல்பட்டு வருவதாக அவர் கூறினார்.

விண்வெளித் துறையில் தற்போது **45**க்கும் மேற்பட்ட நாடுகளுடன் இந்தியா ஒத்துழைப்பு மற்றும் ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

**InSpace** அமைப்பு தொடங்கப்பட்டதில் இருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறு, குறு, நடுத்தர நிறுவனங்கள் மற்றும் புத்தொழில்

நிறுவனங்களிடம் இருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு அவற்றில் **129** விண்ணப்பங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இது விண்வெளித் துறை சீர்திருத்தங்கள் மீதான நம்பிக்கையை அதிகரிப்பதாக திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

<<<<>>>>

நாட்டில் விசாரணை நீதிமன்றங்களில் மட்டும் **2** கோடியே **25** லட்சம் குற்றவியல் வழக்குகள் நிலுவையில் உள்ளதாக உச்சநீதிமன்ற நீதிபதி திரு. எம்.எம். சுந்தரேஷ் கூறியுள்ளார்.

சேலம், அஸ்தம்பட்டி ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் புதிய கட்டிடங்களை திறந்து வைத்து அவர் பேசினார்.

குற்றவியல் வழக்குகளுக்கு விரைவில் தீர்வு காண குழு அமைத்து அவற்றைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், அதற்கான நடைமுறைகள் தமிழகத்தில் முதலில் தொடங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

குற்றங்களுக்கான காரணங்களை ஆராய்ந்து சமூகத்தில் அதை தடுப்பதும் நீதிமன்றங்களின் பணி என்று அவர் கூறினார்.

**(Voice Byte — Sundaresh — 30 Sec)**

இந்த நிகழ்ச்சியில் பேசிய சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி திரு. எஸ்.ஏ. தர்மாதிகாரி, சட்ட நடைமுறைகளின் மூலம் மக்களின் பாதுகாப்பு கேடயமாக நீதித்துறை விளங்குகிறது என்றார்.

<<<<>>>>

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்ட அனைத்து மாநிலங்களின் முன்னேற்றமும் இன்றியமையாதது என்று தமிழக ஆளுநர் திரு ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் கூறியுள்ளார்.

சென்னையில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், நாட்டின் கலாச்சாரம் வானவில்லைப் போன்றது என்று கூறினார்.

வெவ்வேறு நிறங்கள் வானவில்லில் இருப்பதுபோல நாட்டில் வெவ்வேறு கலாச்சாரங்கள் இணைந்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

பல்வேறு மாநிலங்களுக்குச் செல்லும் மக்கள் அங்குள்ள கலாச்சாரம் மற்றும் மரபுகளை ஏற்றுக்கொள்வதுடன், அந்தந்த மாநிலங்களின் வளர்ச்சியில் அவர்கள் முக்கிய பங்காற்றுவதாக கூறினார்.

இது நாட்டின் தனிச்சிறப்பு வாய்ந்த அம்சம் என்றும், இதை அனைவரும் தொடர்ந்து பின்பற்ற வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

அனைத்து மாநிலங்களும் சமமான வளர்ச்சியை அடைய வேண்டியது அவசியம் என்று திரு. ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் தெரிவித்தார்.

<<<<>>>>

சட்டப்பேரவைத் தேர்தல் மற்றும் விடுமுறை நாட்களைத் தொடர்ந்து பல்வேறு மாவட்டங்களில் இருந்து மக்கள் சென்னைக்கு திரும்புவதால் தாம்பரம் உள்ளிட்ட பகுதிகளில் நேற்றிரவும், இன்று அதிகாலையும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

இதனை சரிசெய்யும் பணியில் போக்குவரத்து காவல்துறையினர் ஈடுபட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte — Sureka — 43 Sec)**

<<<<>>>>

மதுரை அருள்மிகு மீனாட்சி அம்மன் திருக்கோயிலில் மீனாட்சி அம்மன் பட்டாபிஷேக விழா நேற்று மாலை நடைபெற்றது.

இதில் திரளான பக்தர்கள் பங்கேற்று வழிபட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte — Raguraja — 45 Sec)**

<<<<>>>>

தமிழகத்தின் சில இடங்களில் இன்று மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

காவிரி டெல்டா மாவட்டங்கள், மேற்குத்தொடர்ச்சி மலையை ஒட்டிய மாவட்டங்கள் மற்றும் தென் மாவட்டங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

பிற பகுதிகளில் வறண்ட வானிலையே நிலவும் என்றும், கோடை வெயிலின் தாக்கம் 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை அதிகரிக்கக் கூடும் என்றும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், அதிகபட்ச வெப்பநிலை 38 டிகிரி செல்சியசையும், குறைந்தபட்ச வெப்நிலை 28 டிகிரி செல்சியசை ஒட்டியும் பதிவாகக் கூடும் என்றும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

*<u>இருவரிச் செய்திகள்</u>*

வட கொரிய அதிபர் திரு கிம் ஜாங் உன்-னை, ரஷ்ய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ஆண்ட்ரே பெலுசேவ், பியாங்கியாங்கில் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

------------

ஜப்பானின் **Hokkido** பகுதியில் இன்று அதிகாலை நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவில் **6** புள்ளி ஒன்றாக பதிவானது.

------------

ஐஓஎஸ் சாகர் கடற்படை பயிற்சிக்காக இந்திய கடற்படைக் கப்பல் ஐஎன்எஸ் சுனைனா, சிங்கப்பூர் சென்றுள்ளது.

------------

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று முதல் **5** நாட்களுக்கு ஹிமாச்சலப்பிரதேச மாநிலத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.

------------

குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், விசாகப்பட்டினத்தில் உள்ள ஆந்திர பல்கலைக்கழகத்தின் நூற்றாண்டு விழா நிகழ்ச்சியில் இன்று கலந்துகொள்கிறார்.

------------

பிரபல புகைப்படக் கலைஞர் ரகுராயின் மறைவுக்குப் பிரதமர் திரு நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.

------------

திருத்தணி அருள்மிகு சுப்பிரமணியசாமி திருக்கோயிலில் சித்திரை மாத பிரம்மோற்சவத்தின் ஆறாவது நாளில் உற்சவர், புலி வாகனம் மற்றும் யானை வாகனத்தில் பவனி வரும் நிகழ்வில் திரளான பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர்.

------------

நாகை மாவட்டம் சிக்கலில் அருள்மிகு நவநீதேஸ்வரர் - வேல்நெடுங்கண்ணி அம்பாள் ஆலயத்தில் நடைபெற்ற திருக்கல்யாணத்தில் ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு வழிபட்டனர்.

------------

திருவள்ளூர் மாவட்டம் கடம்பத்தூர் அருகே சாலையில் நடந்து சென்றவர்களை தெருநாய்கள் கடித்ததில் 8 பேர் காயம் அடைந்தனர்.

------------

அரக்கோணம் - திருத்தணி இடையே குறிப்பிட்ட 2 மின்சார ரயில்களின் சேவை இன்று முதல் 21 நாட்கள் ரத்து செய்யப்படுவதாக தெற்கு ரயில்வேயின் சென்னை கோட்டம் கூறியுள்ளது.

------------

*விளையாட்டுச் செய்திகள்*

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் கொல்கத்தா அணி - லக்னோ அணியை வென்றது.

லக்னோவில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் முதலில் விளையாடிய கொல்கத்தா அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 155 ரன் எடுத்தது.

பின்னர் களமிறங்கிய லக்னோ அணி 8 விக்கெட் இழப்புக்கு அதே 155 ரன் எடுத்ததால், போட்டியில் சூப்பர் ஓவர் முறை கடைபிடிக்கப்பட்டது.

இதில் லக்னோ அணி 2 விக்கெட் இழப்புக்கு ஒரு ரன் மட்டுமே எடுத்தது.

பின்னர் விளையாடிய கொல்கத்தா அணி முதல் பந்திலேயே நான்கு ரன் அடித்து வெற்றி பெற்றது.

இன்று நடைபெறும் ஆட்டத்தில் தில்லி அணி - பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

தில்லியில் இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

-------------

**ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் தில்லியில் நேற்று நடைபெற்ற தில்லி - முகமதன் அணிகளுக்கு இடையேயான ஆட்டம் டிராவில் முடிவடைந்தது.**

**இரு அணிகளும் இப்போட்டியில் தலா 2 கோல் அடித்தன.**

**<<<<The End>>>>**